1992 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 30—3—1992, திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.47 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

42. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னீஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையின் 12—4—1991 ஆம் நாளிட்ட 96 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது].

43. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 27—11—1990 ஆம் நாளிட்ட 999 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது[.

44. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியப் பணி விதிகளில் திருத்தமொன்றுசெய்வது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 4—10—1991 ஆம் நாளிட்ட 1333-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

45. தமிழ்நாடு ஜி.டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜி. டி. நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].